සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Civics

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 7	குடியியற்கல்வி

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 – 5 வரையான வினாக்களுக்கான விடைகளை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிந்து இடைவெளியில் எழுதுக.**

01. நிகழ்கால சமூகத்தின் சிறிய அலகாக ..... காணப்படுகின்றது.
(பாடசாலை, விகாரை, குடும்பம்)

02. ..... ஒருவரது நடத்தைகளில் பாதகமான நிகழ்வினை உருவாக்கும்.
(பொருத்தமான புத்தகங்களை வாசித்தல், தீய நண்பர்களுடன் தொடர்பு, நூல் நிலைய தொடர்பு)

03. பாடசாலையில் மாணவத் தலைவராக தெரிவு செய்யப்பட்டவர் பின்பற்ற வேண்டிய ஒரு சிறந்த செயற்பாடாக ..... கூறலாம்.
((தவறு செய்யும் மாணவர்களை தண்டிப்பதை, மாணவர் மூலம் பல வகையான வேலைகளை பெறுவதை, மாணவர்களிடம் நல்ல முறையில் செயற்படுவதைக்)

04. மக்கள் சமூகத்தில் இருந்து ஒருவருக்கு கிடைக்கும் சிவில் உரிமையாக ..... க் குறிப்பிடலாம். (சமத்துவத்தை, அரச தொழில் செய்வதை, வாக்களிப்பினை)

05. வழமையாக தேசிய கீதங்கள் இசைக்கப்படுவது ..... விழாக்களிலாகும்.
(திருமண, மரண, அரச)

- **வினா இலக்கம் 6 – 10 வரையான கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.**

06. நற்குணங்கள் விருத்தியடையவும் மற்றும் சிறந்த கல்வியை வழங்குவதும் குடும்பத்தின் பொறுப்பாகும். (.....)

07. அம்மாவின் அண்ணனின் மனைவியும், தந்தையின் அக்காவும் உங்களுக்கு மாமி முறையாகும். (.....)

08. கால அட்டவணைக் கேற்ப செயற்படுவது பரீட்சையில் சிறப்பாக சித்தி பெற வழிவகுக்கும். (.....)

09. மனதளவில் ஏற்படும் பல்வேறு மனவெழுச்சிகளை முக பாவனையில் மாத்திரம் கண்டு கொள்ள முடியாது. (.....)

10. இலங்கையானது பல் இன சமூகம் வாழும் நாடாக கருத முடியாது. (.....)

Past Papers Wiki

- **வினா 11 முதல் 15 வரையான வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. மக்கள் சமூகத்தில் காணப்படும் கிராம அபிவிருத்திச் சங்கம் மூலம் ஆற்றப்படும் பணிகளுள் ஒன்று.
    1. சமூக ஒழுக்கத்துக்கு உதவுதல்
    2. தலைவர்களை உருவாக்குதல்
    3. கிராமிய அபிவிருத்தியை மேற்கொள்ளல்
    4. சமயத்தை கற்பித்தல்

12. உரிமைகள் மக்கள் சமூகத்தில் இருந்து எமக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். அதன்படி உரிமைகளின் இயல்புகளில் ஒன்றாகக் கூறக்கூடியது.
    1. வாழும் உரிமை
    2. கல்வி கற்கும் உரிமை
    3. விரும்பிய சமயத்தை பின்பற்றும் உரிமை
    4. கடமைகளுடன் இணைந்த உரிமை

13. தரவுகளும், தகவல்களும் கிடைக்கப்பெறும் சிறந்த ஊடகம் அல்லாதது.
    1. வானொலி
    2. ரூபவாஹினி
    3. சமூக ஊடகம்
    4. கட்டுக்கதைகள்

14. இலங்கையில் எல்லா சமயத்தவர்களுக்கும் ஒரு பொதுவான இடமாகக் கருதக் கூடியது.
    1. சமாதி சிலை
    2. கொழும்பு தெவட்ட கஹ பள்ளிவாசல்
    3. கல் விகாரை
    4. சிவனொளி பாத மலை

15. தேசிய கொடி உருவாக்கத்துக்கு குழுவொன்றை நியமித்த பிரதமர்.
    1. T. B ஜயா
    2. J. R. ஜெயவர்த்தன
    3. D. S. சேனாநாயக்க
    4. G. G. பொன்னம்பலம்

- **இலக்கம் 16 முதல் 20 வரையான வினாக்களில் A பகுதிக்கு பொருத்தமான விடையினை B பகுதியில் இருந்து தெரிந்து இணைக்குக.**

A	B
16. ஒருவரின் நடத்தையை பாதிக்கும் காரணிகளில் ஒன்று	1. கலசம்
17. அரச இலட்சினையில் காணப்படும் ஒரு குறியீடு	2. வொலிபோல்
18. ஒருவர் வளர்த்துக் கொள்ள வேண்டிய நல்லொழுக்கம் சார்ந்த கடமை	3. கெட்ட நண்பர்களுடன் தொடர்பு
19. விளையாட்டினால் ஒருவரிடத்தில் விருத்தி யடையும் பண்பு	4. பெற்றோரை பராமரித்தல்
20. இலங்கையின் தேசிய விளையாட்டு	5. கட்டளைகளை பின்பற்றுதல்.

(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டயமானது.**
- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்குக.**
- **முதலாம் வினாவுக்கு 16 புள்ளிகளும், ஏனைய வினாக்களுக்கு 11 புள்ளிகளும் வழங்கப்படும்.**

01. 1. உங்கள் ஆரோக்கிய விருத்தி பதிவேட்டினை பயன்படுத்தி அறிந்து கொள்ளக் கூடிய சரியான தகவல்கள் 2 னைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

2. தொழில் ஒன்றை செய்வதன் மூலம் வருமானமொன்றை ஈட்டிக் கொள்ள முடியும் அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் 2 தருக. (02 புள்ளிகள்)

3. அருகே காட்டப்பட்டள்ள படத்தினை அடிப்படையாக வைத்து விடைகளை எழுதுக.



1. இப்படத்தில் காட்டப்படுவது எத் தொழில் துறை சார்ந்தது? (02 புள்ளிகள்)
2. மேலே படத்தில் காட்டிய தொழில் செய்யும் போது முகம்கொடுக்கும் பிரச்சினைகள் 2 தருக. (02 புள்ளிகள்)

4. ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் கழிக்க ஏற்படுத்திக் கொள்ள கூடிய செயற்பாடுகள் 2 தருக. (02 புள்ளிகள்)

5. கீழே காட்டப்பட்டுள்ள உரிமைகள் மூலம் நீர் நிறைவேற்றக் கூடிய கடமைகள் 1 வீதம் குறிப்பிடுக.

அ. விரும்பும் சமயத்தினை பின்பற்றுதல் -

ஆ. வாக்களிக்கும் உரிமை – (04 புள்ளிகள்)

6. மனதில் தோன்றும் மனவெழுச்சிப் பண்புகளில் பாதகமான மனவெழுச்சி 2 னை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

02. 1. விரிந்த குடும்பத்தில் காணப்படும் சிறப்பம்சங்கள் 3 தருக. (03 புள்ளிகள்)

2. அ. குடும்ப அங்கத்தவராக இருக்கும் உங்களுக்குள் விருத்தியடைய வேண்டிய நற்பண்புகள் 2 தருக. (02 புள்ளிகள்)

ஆ. வாழ்க்கையில் நல்ல ஒழுக்க நெறிகளை கடைப்பிடித்து வாழ அவசியமான காரணிகள் 2 தருக? (02 புள்ளிகள்)

3. அ. பொருத்தமற்ற மனவெழுச்சி நிலைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் 2 தருக. (02 புள்ளிகள்)

ஆ. வேலை உலகில் காணப்படக் கூடிய தொழில்கள் 2 தருக. (02 புள்ளிகள்)

03. 1. பெற்றோரின் பாதுகாப்பு அற்றுப் போகும் சந்தர்ப்பத்தினால் பிள்ளை முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் 3 தருக. (03 புள்ளிகள்)

2. புத்திசாலியான நுகர்வோராக செயலாற்றுகையில் கவனத்தில் கொள்ளும் விடயங்கள் 3 தருக. (03 புள்ளிகள்)

3. அ. கீழே உள்ள படங்களில் சமயம் சார்ந்த A, B, C, D விடயங்களை இணங்கண்டு பெயரிடுக. (02 புள்ளிகள்)



A



B



C



D

ஆ. மேலே கூறிய சமயங்களினால் சமூகத்துக்கு வழங்கப்படும் சேவைகள் 3 தருக. (03 புள்ளிகள்)

04. 1. சமூகத்தில் காணப்படுகின்ற பிரதானமான உரிமைகள் 2 யும் வகைப்படுத்துக. (02 புள்ளிகள்)

2. தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசினால் உருவாக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் 3 தருக. (03 புள்ளிகள்)

3. அ. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதால் ஏற்படும் பாதிப்புக்கள் 3 எழுதுக. (03 புள்ளிகள்)

ஆ. சிறுவர் தொழில் தொடர்பான சமூகப் பொறுப்புக்கள் 3 தருக. (03 புள்ளிகள்)

05. 1. நீங்கள் பாடசாலை மாணவன் என்ற வகையில் முகங்கொடுத்த இரண்டு சவால்களை குறிப்பிட்டு அவற்றை எதிர்கொள்ளக் கூடிய மாற்று வழிமுறைகள் 2ஐக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

2. பின்வருவோரை பாதுகாக்க அரசாங்காத்தினால் முன்னெடுக்கப்பட்டள்ள நலன்புரி வேலைகள் 2 வீதம் குறிப்பிடுக.

a. சிறுவர்களுக்காக 1 ..... 2 .....

b. யுவதிகளுக்காக / இளைஞர்களுக்காக 1 ..... 2 .....

c. முதியோர்களுக்காக 1 ..... 2 .....

(06 புள்ளிகள்)

3. இலங்கையில் 'சிறுவர்' என குறிப்பிடும் வயது யாது? (01 புள்ளி)

06. 1. ஒவ்வொரு சமூகத்திலும் அக்கலாசாரத்துக் குரிய சிறப்பான கலாசாரப் பண்புகள் காணப்படுகின்றன. அக்கலாசார பண்புகள் 3 ஐக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2. கலாசாரத்தை கையளித்தலில் குடும்பத்தினால் வழங்கப்படும் பங்களிப்புக்கள் 3 னைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

3. அ. நாட்டின் கலாசாரப் பண்புகளை பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் 2 தருக. (02 புள்ளிகள்)

ஆ. இலங்கையானது பல் பண்மை கலாசார நாடாக இருப்பதால் அதில் வாழும் 3 இனக் குழுவினரையும், அவர்களது மதத்தினையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

07. 1. பாடசாலையில் நீங்கள் செய்த கேலியின் காரணமாக அவன் அதிகமாக கோபமடைந்தான். இச்சந்தர்ப்பத்தில் அவனது முகத்திலும் ஏற்பட்ட உடல் ரீதியான 2 மாற்றங்களும் அதற்கு அவன் நடத்தையால் காட்டிய மாற்றங்கள் 2 யும் குறிப்பிடுக.

உடல் ரீதியான மாற்றங்கள்

நடத்தை மாற்றங்கள் (04 புள்ளிகள்)

2. ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கும் போது அவர் காட்டும் உடல் ரீதியான மாற்றங்கள் 3 தருக. (03 புள்ளிகள்)

3. பொருத்தமற்ற மனவெழுச்சி உள்ள ஒருவர் மூலம் சமூகத்தில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும் அவற்றில் 4 னைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** குடியியற்கல்வி

Civic விடைப்பத்திரம் - தரம் 7

பகுதி - i

1. குடும்பம்
2. தீய நண்பர்களுடனான தொடர்பு
3. மாணவர்களுடன் நல்ல முறையில் நடத்தல்
4. சமத்துவத்தை
5. அரச
6. √ 7. √ 8. √ 9. X 10. X
11. 3 12. 4 13. கட்டுக் கதைகள் 14. 4 15. 3
16. கெட்ட நண்பர்களுடன் தொடர்பு 17. கலசம்
18. பெற்றோரை பராமரித்தல். 19. கட்டளைகளை பின்பற்றுதல்
20. வொலிபோல்

பகுதி -ii

01.
1. பெயர், பிறந்ததிகதி, முகவரி
2. குடும்பத்தின் செலவுகளை ஈட்டிக் கொள்ளல், வாழ்க்கை தரத்தை சிறப்பாக பேணல்.
3. 1. விவசாயம் 2. விற்பனை பிரச்சினை, பல நோய்கள், நியாயமான விலை இன்மை.
4. விளையாட்டில் ஈடுபடல், புத்தகங்கள் வாசித்தல், கவிதை, பாட்டு எழுதுதல்.
5. அ. பிறசமயத்துக்கு இடையூறு விளைவிக்காதிருத்தல்.
   ஆ. பிறர் மனம் புண்படாது நடத்தல்.
6. கவலை, கோபம்

02. 1. மூன்று தலைமுறைகளைக் கொண்டது, குடும்ப பலம் அதிகம், குடும்ப தேவைகள் நிறைவேற்ற முடிதல்.
   2. அ. நல்லவற்றை ஏற்றல், தலைமைத்துவத்துக்கு கட்டுப்படல், மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தல்.
      ஆ. நூல் நிலையம், பாடசாலை, குடும்பம், நல்ல நண்பன்
   3. அ. சமயச் செயற்பாடுகளில் ஈடுபடல், வானொலி கேட்டல், சித்திரம் வரைதல்
      ஆ. விவசாயம், வைத்தியத்துறை, ஆசிரியர், தொழிநுட்பவியல்

03. 1. ஆதரவு பாதுகாப்பு, அற்றுப் போதல், கற்பதற்கான சந்தர்ப்பம் அற்றுப் போதல், தொழில் செய்ய நேரிடல்
   2. பொருட்களின் விலைகள் பற்றிய தெளிவு இருத்தல்.
      பொருட்களின் தன்மை பற்றி அறிந்திருத்தல்.
      பொதி செய்யப்பட்ட பொருட்களின் தன்மை.
      சந்தை நிலைமைகளை அறிந்திருத்தல்.
   3. அ. A – பௌத்தம் B - இந்து C – கத்தோலிக்கம் D - இஸ்லாம்.
      ஆ. ஒழுக்கமான சமூகத்தை உருவாக்குதல்.
      சமயத்தை போதித்தல்.
      சமூகத்தில் பொதுச் சேவைகளை செய்தல்.

04. 1. சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள்
   2. தொழிலாளர் சட்டம், ஊழியர் நிதி, விதவைகள் அநாதைகள் நிதி, ஓய்வூதியம், காப்புறுதி
   3. அ. உழைப்புச் சுரண்டல், துஷ்பிரியோகங்களுக்கு ஆளாதல், கற்பதற்கான வாய்ப்பு, இழக்கப்படல்.
      ஆ. சகல பிள்ளைகளையும் தமது பிள்ளைகளாக எண்ணுதல்.
      கட்டாய கல்வியை வழங்குதல்.
      மூத்தோர், சிறுவர் உழைப்பில் வாழாதிருத்தல்.

05. 1. பரிட்சையில் வெற்றிபெறல், மனவிரக்தி, பணப்பற்றாக்குறை
2. தொழில் பயிற்சி, தொழில் சங்கம்
ஓய்வூதியம் நலன்புரிநிதிகள்
பாடசாலை இலவசக்கல்வி
3. 14 வயதக்கு கீழ்

06. 1. சமயம், மொழி, உணவு, ஆடை
2. மருத்துநீர் தேய்த்தல், சுபநேரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்தல், பால் பொங்க வைத்தல்.
3. அ. கலாசார கொடைகளை பாதுகாப்பதன் முக்கியத்தும் பற்றி அறிவுறுத்தல்.
ஆ. கலாசார கொடைகளுக்கு பாதிப்பு ஏற்படும் போது உரிய இடங்களுக்கு அறிவுறுத்தல்.

07. 1. முகம் சிவத்தல், பல்கடித்தல்
நடத்தைகள், ஏசுதல், வேகமாக இயங்குதல், அடித்தல்
2. சிரித்தல், துள்ளுதல், ஆடுதல்
3. பழிவாங்குதல், முன்கோபம், சண்டையிடுதல்.

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank